MCOP. 48/2012

Dated : 14.03.2024

Time: 4.45 p.m to 4.59 p.m

மனுதாரர் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு

<u>மூன்றாம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை</u>

1) நான் மேற்படி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து காலை சுமார் 5:30 மணி அளவில் நடந்தது. விபத்தில் இறந்து போனவர் என்னுடைய தாயார். அப்போது அவருக்கு வயது 65 என்றால் அது தவறு. அனால் அருடைய வயது 60. மேற்படி என் தாயார் வயது மூப்பின் காரணமாக அதிகாலையில் சாலையை தவறாக கடந்து விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் அது தவறு.

2) மேற்படி இரண்டாம் வாகன ஓட்டுநர் அந்த வாகனத்தை கவனமாகவும், நிதானமாகவும் தான் ஓட்டி வந்தார் என்றும் என் தாயார்தான் விபத்துக்கு காரணம் என்றால் அது தவறு. மேற்படி விபத்து குறித்து தலைவாசல் காவல் நிலையத்தினர் வழக்குப்பதிவு செய்தார்கள். அந்த வழக்கு தற்போது என்ன நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தாயாரின் தவறு காரணமாக காவல் நிலையத்தார் அதனை ஏற்கனவே முடிக்கப்பட்டு விட்டது என்றால் அது தவறு.

3) என் தாயாரின் கவனக்குறைவால் விபத்து நடந்ததால் தான் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டு விட்டது என்றும், எனவே மூன்றாம் எதிர் மனுதாரருக்கு எதிராக இம்மனு நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு. என் தாயாரின் வயது மற்றும் வருமானத்தை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் விபத்தில் நான் கூறியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும் அதை மூன்றாம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் அது தவறு. மனுதாரர்கள் யாரும் என் தாயாரின் வருமானத்தை சார்ந்து இல்லை என்று சொன்னால் அது தவறு.

4) இவ்வழக்கில் மேற்படி விபத்து குறித்த இறுதி அறிக்கையை நான் சமர்ப்பிக்கவில்லை. மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan

**Accidents Claim Tribunal, Attur**